**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 48/2024**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய அழகுசுந்தரம் **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 17.03.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகுசுந்தரம் | | |
| Father /Husband Name | : பக்கிரிசாமி | Court | : |
| Village | : திருவாரூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 48/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி இளங்கோவன் என்பவரின் பவர் ஏஜென்டுகளில் ஒருவராவேன் மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

வாதி பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்காக வில்லங்க சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.10.1996 தேதியில் 1ம் பிரதிவாதிக் ராஜா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.09.2023 அன்று வாதி பிரதிவாதிகளுக்கும் மற்ற நபர்களுக்கும் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை ராஜா பெற்றுக்கொண்டதற்காக அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.